## 1. இன்று புதிதாய்ப் பிறப்போம்

விடையறியா வாழ்க்கையின் விந்தைகளை உணர்ந்திட்டு
தடைதாண்டி பயணத்தை தக்கபடி தொடர்வதற்கு,
இடைப்பட்ட வாழ்நாளை இன்றைக்கு திட்டமிட்டு
மடைதிறந்த வெள்ளமென மறுபிறவி எடுத்திடுவோம்;

சோதனைகள் நம்மீது சுட்டெரிக்கும் தாக்குதலை
வேதனையாய் கருதாமல் விருப்போடு சந்தித்தால்,
ஆதவனும் அதுகண்டு அதிசயிக்கும் வண்ணத்தில்
சாதனைகள் புரிந்திடலாம்; சரித்திரமே காலடியில்;

முடிந்துபோன காலத்தை மூளைக்குள் பதியாமல்
இடிந்துபோன மாளிகையாய் இனிமேலும் வாழாமல்
அடிபட்ட புலிபோல ஆர்ப்பரித்து எழுந்திட்டால்
பிடிபடாத வானத்தைப் பிடித்திடலாம் நம்விரலால்;

காற்றடிக்கும் திசைநோக்கி கலைகின்ற காகிதமாய்
நேற்றுவரை வாழ்ந்திட்டோம்; நேர்த்தியினை இழந்திட்டோம்;
மாற்றுகிற சிந்தனையை, மனமெங்கும் பேரின்பம்
ஊற்றுகிற சக்தியினை உவப்போடு ஏற்றிடுவோம்.

காலமது விடிவதற்காய் காத்திருக்க நினைக்காமல்
பாலமதை உருவாக்கி பாருலகில் நடைபயில்வோம்;
ஆலமர விழுதுகளாய் ஆயிரம்பேர் தோன்றிட்டால்
ஞாலமது நம்மடியில்; ஞாபகம் இருக்கட்டும்.

புரியாத வாழ்க்கையினை புதிராகக் கருதாமல்
சரியான வழியிலதை சந்திக்கத் தொடங்கிடுவோம்;
அரிதாரம் பூசாமல், அயலாரின் அன்பிற்கு
உரியோராய் வாழ்வதற்கு உள்ளத்தில் முடிவெடுப்போம்;

பிறந்து வளர்ந்திட்டு, பிரிகின்ற காலத்தில்
இறந்து போவதற்கா இங்கேநாம் பிறந்தோம்?
சிறந்த சாதனையின் சிறகடிக்கும் தாலாட்டில்
திறந்த மனத்தோடு திகழ்ந்திட வேண்டாமா?

கூட்டுக்குள் பறவையாய் குழம்பியது போதுமினி;
நாட்டுக்கு உயர்வூட்ட நாமின்று பிறந்திடுவோம்;
பூட்டென்னும் சிறையுடைத்து புத்துலகம் காண்பதற்கு
பாட்டென்னும் வாளேந்தி படையெடுத்து வென்றிடுவோம்;

## 2. சிந்தை நிறை சிங்கப்பூர்

தங்கமென ஒளிர்ந்தபடி தாரணியில் புகழ்காணும்
சிங்கப்பூர் நாடெனது சிந்தையிலே மிளிர்கிறது;
எங்குமுள மனிதர்களும் ஏற்றமுடன் வாழ்வதற்கு
பொங்கிவரும் இந்நாட்டை பூரிப்பாய் விரும்பிடுவர்;

விரிந்திங்கு கிடக்கின்ற விந்தைநிறை பசுமையினை
புரிந்துநாம் கொள்வதனால் புத்துணர்ச்சி பெறுகின்றோம்;
சரியாகத் திட்டமிடும் சரித்திரத்தை சிங்கப்பூர்
பரிசாகப் பெற்றதனால் பாருலகை வெல்கிறது;

உயர்கின்ற கட்டடங்கள் உழைப்பிற்கு சான்றாக
அயர்வில்லா தொழிலாளர் அழகேற்றும் திருநாடு;
தயங்காமல் உதவுகின்ற தரமான குடிமக்கள்;
வியப்போடு வெளிநாட்டார் விழிவிரித்து நிற்கின்றார்;

அலைவீசும் கடல்கூட அடக்கமுடன் இங்கிருக்கும்;
மலைபோல உதவிகளை மக்களினம் ஆற்றிவரும்;
கலைவளரும் சிங்கப்பூர் கணக்கில்லா சாதனையால்
விலைமதிக்க முடியாமல் விண்ணைப்போல் உயர்கிறது;

சின்னஞ் சிறுநாடாய் சிறகடிக்கும் சிங்கப்பூர்
தன்னாட்டு மக்களுக்கு தாயாக விளங்கிட்டு
மின்னுகிற சலுகைகளை மிடுக்காக வழங்குவதால்
இன்னமுத வாழ்வதனை இந்நாட்டார் பெற்றிட்டார்;

பணிவன்பு கட்டொழுங்கு பாசமுள்ள அரவணைப்பை
அணியாகக் கொண்டதனால் அனுதினமும் மக்களினம்
தணியாத பாசமுடன் தத்தமது கடமையினை
மணிபோல ஆற்றிட்டு மகிழ்வோடு வாழ்கிறது;

படிப்போரின் நலங்காக்க பல்லுதவி வழங்கிட்டு
முடிவில்லாக் கல்விக்கு முத்திரையைப் பதிப்பதற்கு
வடிவமைக்கும் திட்டங்கள் வளங்கூட்டி வருவதனால்
இடிபோன்ற துயரங்கள் இங்கென்றும் தோன்றாது.

எண்ணமதில் புத்தாக்கம் எப்போதும் நிகழ்வதனால்
மண்ணுலகின் சொர்க்கமென மதிப்போடு திகழ்கிறது;
கண்ணான இந்நாட்டை காலமெலாம் உயர்த்திடவே
உண்மையுடன் உழைக்கின்ற உறுதியினைப் பெற்றிடுவோம்.

## 3. நாளைய முதியோர் நாம்

விதையூன்றி செடிவளரும் வித்தைதான் நம்வாழ்வு;
சதைகூடி எலும்போடு சலிக்காது வளர்கின்றோம்;
கதைமுடியும் காலத்தில் கண்ணீரின் தாலாட்டில்
சிதையேறும் வாழ்வதனை சிந்தித்துப் பார்ப்போமா?

கருவறை தொடங்கி கல்லறை தொடும்வரை
வருகின்ற காலமே வாழ்க்கையின் எல்லை;
உருவமது இளமையில் உற்சவம் நடத்திட்டு,
தருகின்ற பரிசன்றோ தள்ளாத முதுமை?

ஆடுகின்ற ஆட்டங்கள் அரங்கேறும் இளமையிலே
ஓடுகின்ற வாழ்நாளை ஒருநிமிடம் சிந்தித்தால்,
பாடுபட்டு உழைத்திட்டு படர்கொடியாய் மாறிட்ட
நாடுநிறை முதியோரை நன்றியுடன் காத்திடலாம்;

அழிகின்ற வாலிபத்தை அன்றாடம் பேணிட்டு,
மழித்திட்ட முகத்திற்கு மரியாதை காட்டிட்டு
கழிக்கின்ற காலத்தில் கண்ணான முதியோரை
பழிக்கின்ற இளையர்களை பாருலகம் பொறுத்திடுமா?

நேற்றைய தளிர்களே, நேர்த்திமிகு விருட்சங்கள்;
மாற்றுகிற சூழ்நிலையால் மனமுடைந்து கிடக்காமல்
காற்றுப்போல் அவர்களது கண்ணீரை ஆற்றிட்டு
ஊற்றிடுவோம் பணிவன்பை; உற்சாகம் கொப்பளிக்க;

தள்ளாடும் உடலமைப்பு; தளர்கின்ற குரலசைவு;
உள்ளாடும் சோகத்தை உதட்டுக்குள் மறைத்தபடி
பள்ளத்தில் கிடக்கின்ற பாசமுள்ள முதியோரை
அள்ளிநாம் அணைத்திட்டு ஆனந்தம் தரலாமே!

அரிதான மனிதஇனம் அறிவதற்கு ஒன்றுண்டு;
சரியாக நாளைநாம் சந்திப்போம் முதுமையினை;
பரிசான இளமையது பாய்ந்தோடி மறைந்துவிடும்;
தரிப்பதற்கு முதுமையது தயங்காது காத்திருக்கும்;

இன்றைக்கு ஒருமுடிவை இதயத்தில் ஏற்றிடுவோம்;
கன்றுக்குத் தாய்போல கவனிப்போம் முதியோரை;
என்றைக்கும் அவர்வாழ்வு எழிலாக அமைவதற்கு
குன்றாத பாசத்தைக் கொடுத்திட்டு மகிழ்வோமே!

## 4. தமிழே! உன்னிடம் ஒரு வேண்டுகோள்!

கல்தோன்றாக் காலத்தே கலைகண்ட தமிழ்த்தாயே!
சொல்லாக நீயன்று சுவைகூட்டி வந்ததனால்
இல்லாத மானிடரும் இதயத்தில் உனையேற்று
வல்லோராய் மாறிட்டு வான்புகழைக் கண்டிட்டார்;

மின்னலென உன்வீச்சு மிடுக்கோடு ஒளிவீச,
கன்னலினை உண்டிட்ட களிறுபோல் ஆயினரே!
இன்னமுதம் ஊட்டியதால் இனியதமிழ் சான்றோர்கள்
மன்னரென உருமாறி மகிழ்வோடு வாழ்ந்திட்டார்;

முடியுடை மூவேந்தர் முயற்சியால் நீஎன்றும்
அடிமுடி காணாத அரும்பொருள் ஆனாயே!
வடித்திட்ட காவியமோ, வரலாற்றின் சாதனையாய்
படித்திட்டக் கூட்டத்தை பரவசத்தில் ஆழ்த்தியது.

சங்கத்தால் வளர்ந்தவளே! சந்தனமாம் இலக்கியத்தை
அங்கமென நீபெற்று அழகூட்டி நிற்பதனால்,
எங்குமுள எம்தமிழர் ஏற்றமுடன் உன்புகழை
தங்குதடை இல்லாமல் தாரணியில் பாடுகிறார்.

காலமது மாறிவிட்டால் கருத்ததுவும் மாறிவிடும்;
ஞாலமது இதைஎன்றும் ஞாபகத்தில் வைக்கிறது;
நாலடியார் திருக்குறளை நலஞ்சேர்க்கும் காப்பியத்தை,
ஆலமர விழுதுகளாய் அவனியிலே பதிவதற்கு

இணையத்தை பிடித்திட்டு இயங்குதற்கு முடிவெடுத்தால்,
அணைகடந்த வெள்ளமென அருந்தமிழே! நீவளர்வாய்;
துணைகாட்டும் கணினியில் துள்ளுநடை போட்டபடி
கணைவீசும் பகைவென்று கண்ணே!நீ உயர்ந்திடுவாய்;

சுருங்கிவரும் உலகத்தில் சுடராக நீவிளங்க
அருமைமிகு கணினிக்கு ஆணையிட வேண்டாமா?
மருந்தாக அதுஅமைய மாட்சியுடை உலகத்தார்
விருந்தாக உனைஏற்று வியப்படைய வேண்டுமம்மா!

உறைக்குள் வாள்கிடந்தால் உதவியது கிடைத்திடுமா?
அறைபோன்ற இலக்கணத்தில் அகப்பட்டுக் கிடக்காமல்
சிறையுடைத்த புதுக்கவிதை சிறகடித்து பறப்பதுபோல்,
கறையற்ற தமிழே!நீ கணினியில் கொடியேற்று!

## 5.எங்கே போகிறது உலகம்?

அரிதான பிறவியென்று அகிலமே மானிடனை
சரியாகத் தேர்ந்தெடுத்து சாட்சியம் அளிக்கிறது;
உரியபல பண்புகளை உலகஇனம் இழந்திட்டு
புரியாத புதிராக புலம்மாறிப் பெயர்கிறதோ?

இன்பமுடன் வாழ்வதற்கு இதயத்தைத் தொலைத்திட்டு
தன்நலத்தை காப்பதற்காய் தவறிழைக்க விரைகின்ற
வன்முறையை கடைப்பிடிக்கும் வரையற்ற சிலகூட்டம்
தொன்மையுடை உலகத்தில் தொடர்கின்ற கரும்புள்ளி;

ஆக்கத்தை தருவதற்கே அறிவியல் பிறந்ததென்று
ஊக்கமுடன் படித்துவிட்டு உற்சாகம் பெற்றதெல்லாம்
தூக்கத்துக் கனவாக, துயரங்கள் நனவாக,
ஏக்கத்தில் மக்களினம்; எதிர்காலம் எப்படியோ?

தூவுகின்ற நச்சுவிதை, துணிச்சலுள்ள சிலர்மனதில்
மேவுகின்ற காரணத்தால் மேதினியே பிணக்காடு;
சாவுக்கும் அஞ்சாத சண்டாளர் செயல்களினால்
கூவுகின்ற குயிலோசை குவலயத்தில் கேட்பதில்லை;

எத்தனையோ ஆயுதங்கள்; எரிகணையின் தாக்குதல்கள்;
அத்தனையும் உயிர்குடிக்க அனுதினமும் தவிக்கிறதே!
இத்தனையும் அறிவியலின் இமயத்தைத் தொட்டவரின்
பித்தான செயலென்று பிறருணர வேண்டாமா?

கடலன்று பிரித்ததனால் கண்டங்கள் பிரிந்ததுபோல்,
திடமில்லா மூடர்சிலர் திகைப்பூட்ட நினைத்திட்டு,
உடலெல்லாம் அணுபூசி உலைவைக்க உயிர்தேடி
தடம்மாறிப் போவதற்கா தந்திட்டார் அறிவியலை?

வெடிக்கின்ற அணுகுண்டால் வெந்தெரியும் உடற்கூடு;
குடிக்கின்ற நீரின்றி குமுறிடுமே பெருங்கூட்டம்!
விடிகின்ற காலத்தை விரக்தியுடன் எதிர்நோக்கும்
முடிவறியா மக்களது முன்னேஓர் இருள்காலம்;

உள்ளத்தில் தீவிரத்தை உயிராகக் கொண்டவரே!
பள்ளத்தில் பல்லுயிரை பதித்தது போதுமினி;
கள்ளமில்லா மனிதனாய், கண்டிப்பாய் மாறிட்டு
வெள்ளமென பெருகிவரும் வெறியுணர்வை எரித்திடுவீர்!

## 6. புவி ஆளும் கவி

அலைவீசும் கடலன்னை; அரவணைக்கும் பூங்காற்று;
விலையில்லா இயற்கைவளம்; விண்ணூரும் நிலவினொளி;
மலையுச்சி, ஆற்றுநடை, மயக்குகிற பெண்ணுருவம்,
கலைகூட்டி கவிஞர்களை கற்பனைக்குள் ஆழ்த்திவிடும்;

தலைவணங்கா ஆற்றலுடன் தண்டமிழைப் பருகியதால்
இலைபோல சுழன்றபடி இவ்வுலகை ரசித்திட்டு,
குலைதள்ளும் வாழையென குவலயத்தில் கருத்துகளை
சிலைபோல வடித்திட்டு சீர்திருத்தம் செய்திடுவார்;

கண்ணிலே காண்பதனை கவியாக்கும் கவிஞனவன்
எண்ணத்தை கூர்தீட்ட ஏறிடுவான் கனவுலகம்;
வண்ணமிகு பூக்களிலே வழிகின்ற தேன்சேரும்
கிண்ணமென மனத்தோடு கிளம்பிடுவான் புதுப்பயணம்;

எல்லையற்ற வான்வெளியில் எத்தனையோ ரகசியங்கள்;
தொல்லைகளை விட்டெறிந்து தொடர்ந்திடுமே அவன்பயணம்;
முல்லைப்பூ சிரிப்பதுபோல் முழுவானில் விண்மீன்கள்
சொல்லாத சொற்களினை சுயமாகச் சிந்திப்பான்;

சுட்டெரிக்கும் சூரியனை, சுடரொளியாய் ஆனவனை,
இட்டமுடன் பார்த்திட்டால் இயற்றிடுவான் ஒருகவிதை;
வட்டநிலா மேகத்தை வாஞ்சையுடன் தழுவையிலே
கட்டவிழ்ந்த உள்ளமது கரைமீறிக் கவிபாடும்;

புவியிலுள்ள நாடுகளை புதுப்பிக்கும் செய்திகளை
கவிதையிலே வார்த்திட்டு களிப்படையும் மானிடன்,
தவிக்கின்ற உயிர்கட்கு தணியாத காதலுடன்
குவிக்கின்ற கவிதைகள் குளிர்நிலவாய் மாறிவிடும்;

வீரமும் காதலும் விதையாக கவிதையினை
தீரமாய் படைத்திட்டு திசையெட்டும் பரப்பிடுவான்;
சாரல்மழை போலஎங்கும் சரியான எண்ணங்களை
பாரமின்றி இதயத்தில் பக்குவமாய் பதித்திடுவான்;

மன்னர்க்கும் அஞ்சாது மடைதிறக்கும் வெள்ளமென
தன்நெஞ்சில் கவிதைகளை தக்கபடி உருவாக்கி
இன்னமுதச் சொற்களினால் இயன்றவரை மெருகூட்டும்
உன்னதத்தால் கவிஞனை உலகமே பாராட்டும்;

## 7.தொட்டுவிடும் தூரத்தில் வானம்

எங்கிருக்கும் பணமென்று எப்போதும் தேடிட்டு
பொங்கிவரும் ஆசையினால் பொறுமையினை இழந்தபடி
தங்கநிகர் நம்பிக்கை தனைமட்டும் மறந்திட்டு
மங்குகிற வாழ்வதனில் மயங்கிநாம் இருக்கின்றோம்;

போராட்ட வாழ்வென்று பொலிவிழந்து கிடக்காமல்,
பாராட்டுப் பெறுவதற்கு பலமூட்டும் நம்பிக்கை;
நீராடும் வயல்தானே நிச்சயமாய் நெல்ஈனும்;
தீராத ஏழ்மைக்கு தீவைக்கும் நம்பிக்கை;

சிந்தனையில் தெளிவிருந்தால் சீர்சான்ற சாதனைகள்
வந்தபடி எப்போதும் வாசலிலே காத்திருக்கும்;
சந்தனமாம் நம்பிக்கை சரியாக அமைந்திட்டால்
எந்தவித குறையின்றி ஏற்றமுடன் வாழ்ந்திடலாம்;

முயலொன்று தோற்றதற்கு முயலாமை காரணமே;
அயராத நம்பிக்கை ஆமைக்கு வலுச்சேர்க்க
தயங்காது போட்டியிலே தடைதாண்டி வென்றதனை
சுயமாகச் சிந்தித்தால், சுடராகும் நம்வாழ்வு;

எதிர்காலம் குறித்துநாம் ஏங்கித் தவிக்காமல்
புதிதாக முயன்றபடி புத்தாக்கம் பெறுவோமே!
விதிகண்டு அஞ்சாமல் விடியலைக் காண்பதற்கு
உதிக்கட்டும் நம்பிக்கை; உயிரோட்டம் தொடரட்டும்;

சருகுகளாய் காய்ந்தபடி சாவதற்காய் வாழாமல்
உருகுகிற மெழுகேற்றும் உயர்வான ஒளியாக
வருகின்ற காலத்தை வலிமையுடன் எதிர்கொள்ள
பெருகிவரும் நம்பிக்கை பேராற்றல் தந்திடுமே;

பிறந்திட்ட நாள்முதலாய் பீதிக்குள் கிடந்தாலும்
மறந்திட்ட நம்பிக்கை மனதிற்குள் தோன்றிட்டால்;
இறக்கின்ற நொடிவரையில் இன்பத்தின் தாலாட்டில்
சிறந்திட்ட வாழ்க்கையினை சீராகப் பெறலாமே!

மட்டற்ற நம்பிக்கை மனவீட்டில் குடிவந்தால்,
எட்டாத தொலைவினிலே எழில்காட்டும் வானத்தை
கட்டுக்குள் அடக்கிட்டு கச்சிதமாய் சிறைப்பிடித்து
தொட்டுவிடும் தூரத்தில் தொங்கவிட்டு மகிழ்ந்திடலாம்;

## 8.சிகரத்தை நோக்கிய பயணம்

கடல்சூழ் உலகத்தில் கணக்கற்ற மக்களினம்
உடலால் ஒத்திருந்தும் உச்சரிக்கும் மொழியாலே
இடந்தோறும் மாறுபட்டு இன்றைக்கு வாழ்வதனால்,
திடமான ஓரினமாய் திகழ்வதற்கு வாய்ப்புண்டா?

சுருங்குகிற பூமியில் சுதந்திரமாய் நாம்வாழ
கருதுகின்ற காலமது கண்டிப்பாய் நிறைவேற,
பெருமளவு உதவுதற்கு பிரியமாய் முன்வந்தால்
உருவாகும் ஓருலகம் உற்சாக வடிவோடு;

தனக்காக வாழ்வதற்கா தனிப்பிறவி கண்டிட்டோம்?
இனத்தோடு மதம்தாண்டி, இதயத்தை விரிவாக்கி
தினந்தோறும் வறுமையால் தீக்காயம் கொண்டோரை
மனதளவில் தளர்ந்துள்ள மாசில்லா மனிதர்களை

கரங்கொண்டு அணைத்திட்டு கவலைகளை நீக்கிட்டால்,
வரம்வேண்டி பிறர்நிழலில் வாழ்கின்ற நிலைஏது?
மரம்வாழை காட்டுவதை மனிதர்கள் உணர்ந்திட்டால்,
தரமிக்க சமுதாயம் தாரணியில் மலர்ந்திடுமே;

வட்டத்தில் சிக்குண்ட வாழ்க்கையினை தொலைத்திட்டு,
இட்டமுடன் தொண்டாற்றும் இதயத்தைப் பெற்றிட்டால்
திட்டங்கள் தெளிவாகி திசைமாறா ஏழ்மையினை
சட்டத்தின் துணையோடு சரியாக அகற்றிடலாம்;

அடிப்படையாம் தேவைகளை அடையாமல் பெருங்கூட்டம்
துடிக்கின்ற நிலையறிந்து துயர்தீர்க்க இணைந்திடுவோம்;
வடிக்கின்ற கண்ணீரை வாஞ்சையுடன் துடைத்திட்டு
குடிமக்கள் நலங்காக்கும் குவலயத்தைப் படைத்திடுவோம்;

கண்ணான கல்வியுடன் களிப்பூட்டும் வேலையதும்
உண்ணாத மாந்தர்க்கு உயிராக ஆகிவிடும்;
எண்ணத்தில் புத்தாக்கம் எழுச்சியுடன் வந்தாலே
மண்ணாளும் வேந்தரென மக்களினம் மாறிவிடும்;

சந்தையிலே விற்கின்ற சரக்கல்ல மனிதஇனம்;
விந்தைகளை புரிகின்ற வீரத்தின் விளைநிலமே;
சிந்தித்து உதவிட்டால் சிகரத்தை அடைந்திடலாம்;
வந்திடுவீர்! கரம்சேர்த்து வானுலகை வென்றிடுவோம்!